
www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்

520 2546

ஓசை:2
ஒலி:2
5.ஜூன்1993






# ராஜீவ்-பிரேமதாசா வன்முறையின் அறுவடைகள்



படம்: க.பாலேந்திரா

## யாழ் மத்திய கல்லூரி நான்காவது தடவையும் வெற்றி பெற்றது



தமிழோசை
THAMIZHOSAI

www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


June 1ம்
திகதியிலிருந்து
பரத நாட்டிய
வகுப்புகள்
நீஸ்டனில் நடைபெறுகின்றன.
ஆசிரியை: ஆனந்தராணி பாலேந்திரா
(முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி நடன ஆசிரியை)
இடம்:
SAINT MARY'S CHURCH
NEASDEN,
LONDON NW 10
மேலதிக விபரங்கட்கு:
TEL: 081 - 459 4335




AUGUST 93
விண்ணப்பத்திற்கும்
மேலதிக விபரங்கட்கும்
P.O.BOX 3186 LONDON E 17 6TJ

WE CAN HELP YOU
FACING REPOSSESSION ?
REDUNDANCY ?
UNEMPLOYED ?
OR
HAVING HOUSING DIFFICULTIES ?
THEN CONTACT US NOW !
WE HAVE COMPLETE HOUSES AVAILABLE IMMEDIATELY FOR FAMILIES
DO NOT DELAY
TEL: 081 - 572 3796


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்



# குடாநாட்டில் இராணுவ நடிவடிக்கை ஓய்வு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒரு மாத காலமாக இனம்புரியாத ஒரு அமைதி நிலவி வருகிறது. விமானத் தாக்குதல்கள் ஓய்ந்திருக்கின்றன. 'மினி' இராணுவ நடிவடிக்கைக்கான அறிகுறி கூட தென் படவில்லை. அங்குள்ள இராணுவ முகாம்களை அண்டியுள்ள பிரதேசங்களில் இருந்தாற்போல சிறுசிறு 'ஷெல்' தாக்குதல்கள் இடம்பெறுவதை மட்டுமே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பலாலி, காங்கேசன்துறை, வசாவிளான் இராணுவ நிலைகளின் எல்லைப் புறங்களில் முன்னர் மாதத்தில் ஒரு தடவையாவது 'எல்லை விஸ்தரிப்பு' இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுவதுண்டு. தற்போது அத்தகைய அமைதி எடுத்துக் காட்டுகின்ற போதிலும், புலிகளுக்கு எதிரான நட வடிக்கையில் எந்த மாற்றமும் கிடையாது என கூட்டுப்படைகளின் பேச்சாளர் பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித் திருக்கிறார். ஆனால் எந்த நடவடிக் கைக்கான முன்னேற்பாடுகளையும் இப்போதைக்குக் காண முடிவதில்லை.

இதேவேளை வடபகுதி மக்கள் விபரம் புரியாத ஒரு சூழ்நிலையிலேயே இப்போது வாழ்ந்து வருகின்றனர். ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்குப் பின்னர் வடக்கில் இராணுவ நடவடிக்கை மௌனமாகியிருப்பதனால், புதிய அரசின் நிலைப்பாடு மென்மையானதாக இருக்குமோ என்ற எண்ணமே வடக்கில் நிலவுகிறது. புதிய ஜனாதிபதியின் போக்கை வடபகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

# கொழும்பு வரும் வடபகுதி மக்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் இருந்து கொழும்பு வருவோரின் எண்ணிக்கை தற்போது வெகுவாக குறைந்துள்ளது. லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி பிரேமதாசா ஆகியோரின் கொலைகளையடுத்து கொழும்பில் நிலவிய அச்சம் நிறைந்த சூழ்நிலையும், வடபகுதி பயணிகளின் வருகை குறைந்ததற்கு ஒரு காரணமாகும். மேலும் பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி வடக்கிலிருந்து கொழும்புக்கு இளைஞர்கள் வருவது பெரிதும் குறைந்திருக்கிறது.

கொழும்பில் உள்ள பல்வேறு விடுதிகளிலும் வந்து தங்கியிருந்த வடபகுதி மக்கள் பலர் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையையடுத்து மீண்டும் குடாநாட்டுக்கே திரும் பியுள்ளனர். கொழும்பில் கலவரம் உருவெடுக்கலாமென்ற பதற்றம் நிலவி யதால் வவுனியாவுக்குச் சென்று தங்கியிருந்த பலரும் வடபகுதிக்குச் சென்றுவிட்டனர்.

இதேவேளை கிளாலி படகுச் சேவை சமீப நாட்களாக சீரற்றுக் காணப்படுகிறது. வாரத்தில் ஒரு சில தினங்கள் மட்டுமே கிளாலி ஊடான படகுப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக வடக்கிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படுவோர் வாரத்தில் ஒரு சில தினங்கள் மாத்திரமே வவுனியாவை வந்தடைகின்றனர். கொழும்பிலிருந்து புறப்படும் பெருமளவு பயணிகள் படகுக்காக கிளாலியின் இக்கரையான கிளிநொச்சியில் இரண்டு மூன்று தினங்கள் காத்துக் கிடக்கின்றனர்.

# வடக்கில் மீண்டும் தட்டுப்பாடு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் மண்ணெண் ணெய்க்கும், சீனிக்கும் மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் இரண்டு லீட்டர் மண்ணெண்ணெய் மாத்திரமே வழங்கப்பட்டு வருகிறது. உணவு முத்திரைக்கு ஒரு கிலோ சீனியே வழங்கப்படுகிறது.

சீனியை இப்போது வெளிக்கடைகளில் அடியோடு பெற முடிவதில்லை. வடக்கில் ஒரு போத்தல் மண்ணெண்ணெய் கடைகளில் 200 ரூபா வரை விற்கப்படுகிறது. வடகிழக்குக்கு வெளியே மண்ணெண்ணெயின் (ஒரு போத்தல்) விலை 8 ரூபா ஆகும். இதன் காரணமாக மாணவர்கள் இரவில் மண்ணெண்ணெய் விளக்கில் படிக்க முடியாத நிலைமை மீண்டும் ஏற்பட் டுள்ளது. அரிசி ஒரு கிலோ 30 ரூபாவாகவே அங்கு கிடைக்கிறது. வடக்குக்கு அத்தியாவசிய பொருட்களை கப்பலில் ஏற்றிச் செல்லும் வேலைகள் அடிக்கடி தாமதமடைவதால் இந்நிலைமை ஏற்பட்டு வருகிறது.

# யாழ் வைத்தியசாலைக்கு 26 டாக்டர்கள் நியமனம்

(கொழும்பு)

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக 26 டாக்டர்கள் பதவியேற் றுள்ளனர். யாழ்.பல் கலைக் கழக மருத்துவ பீடத்தில் பயின்ற கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற இறுதி யாண்டு பரீட்சையில் சித்தியடைந்த 56 பேரில், 26 பேர் யாழ்.வைத்திய சாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தின் மூலம் யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர்களுக்கு நிலவிய பற்றாக்குறை ஓரளவு நீங்கியுள்ளது. இதேவேளை இவ்வைத்தியசாலைக்கு ஜேர்மன் அரசின் உதவியுடன் 'எக்ஸ்றே' கருவி தொகுதியொன்று கிடைக்கவிருக் கிறது.

யாழ்.மாவட்டத்தில் வீடுவாசல்களை இழந்த மக்களின் புனர்வாழ்வுப் பணிக்காக ஜேர்மன் அரசு 11 கோடி 30 லட்ச ரூபாவை உதவியாக வழங்கியுள்ளது. இந்நிதியில் இருந்து 3 கோடி 30 லட்ச ரூபாவை எக்ஸ்றே தொகுதி கொள்வனவு செய்ய வழங்கப்போவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிதிக்கான காசோலை கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகத் தினால் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க குடாநாட்டில் காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் மயிலிட்டியில் முன்னர் இயங்கிய காசநோய் வைத்தியசாலையை விரைவில் கைதடி பகுதியில் திறப்பதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்ற கப்பலில் இவ்வைத்தியசாலைக் குரிய உபகரணங்கள் எடுத்து வரப்படும்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 3 மாத காலத்தில் சுமார் 500 பேர் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டு வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# 2வது மருத்துவ பீடம் மட்டக்களப்பில் நிறுவப்படும்

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணத்தில் இரண் டாவது மருத்துவபீடம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. மட்டக்களப்பு பகுதியில் மேற்படி மருத்துவபீடம் நிறுவப் படும். கிழக்கிலங்கை பல்கலைக்கழகத் துடன் இணைந்து இந்த மருத்துவ பீடம் இயங்கும்.

தமிழ்ப் பிரதேசத்தின் முதல் மருத்துவபீடம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. மட்டக்களப்பில் நிறுவப் படவிருப்பது தமிழ்ப்பிரதேசத்தின் இரண்டாவது மருத்துவபீடமாகும். இதற்கென மட்டக்களப்பு வைத்திய சாலையை போதனா வைத்தியசாலை யாக அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கை இப்போது மேற்கொள் ளப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 34 லட்சரூபா செலவிலான அபிவிருத்தி வேலைகள் மட்டக்களப்பு வைத்தியசா லையில் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் 227 லட்சரூபா செலவில் அங்கு அபிவிருத்தி வேலைகளைச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்று வைத்தியசாலை அபிவிருத்தி குறித்து மதிப்பீடுகளை மேற்கொண்டார்.

# கான்ஸ்டபிள்! சி.ஐ.டி.யிடம் சிக்கினார்

(கொழும்பு)

தினமும் காலையில் சிங்கப்பூருக்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை இர கசிய பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர் நாளாந்தம் கடமைக்கு வந்து கையொப்பம் இட்டு விட்டு விமானத்தில் ஏறி சிங்கப்பூர் சென்று திரும்புபவர் என்று தெரியவந்துள்ளது. மாலையில் கொழும்பு திரும்பும் மேற்படி கான்ஸ்டபிள் அலுவலகம் சென்று கையொப்பம் இட்டுவிட்டு வீடு திரும்புவாராம். நீண்ட காலமாக சிங்கப்பூர் வியாபாரம் செய்து வந்த இவர் தற்போது இரகசிய பொலிசாரிடம் சிக்கியுள்ளார்.

இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பெறுமதியான துணிமணிகள், உயர்ந்த ரக மதுபானங்கள் போன்றவற்றை விற்று பெரும் பணம் சம்பாதித் திருப்பதாக இரகசிய பொலிசாருக்குத் தெரிய வந்துள்ளது.

மேற்படி பிரயாண மோசடி குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும், சுங்க அதிகாரி ஒருவரும் பாராமுகமாக இருந்துள்ளனர். இரு அதிகாரிகளையும் பொலிஸ் கான்ஸ்டபிள் நன்கு கவனித்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இரு அதிகாரிகளையும் இரகசிய பொலிசார் விசாரணை செய்துள்ளனர்.

வர்த்தகர் என்று தன்னைக் கூறிக் கொண்டு கடவுச்சீட்டு பெற்ற கான்ஸ் டபிள் கடந்த ஏழு வருட காலமாக சிங்கப்பூர் பயணம் மேற்கொண்டு வந்துள்ளார். இவருக்கு இரத்ம லானையில் ஆடம்பர வீடு உள்ளது. இவ்வீட்டை சோதனையிட்ட பொலிசார் விலையுயர்ந்த பொருட்களை அங்கு இருப்பதைக் கண்டுள்ளனர். கடத்தல் பொருட்களை பல்வேறு கடைகளுக்கும் இவர் விற்று வந்துள்ளார்.


# 16 வருடம் பயணம் செய்த கடிதம்!

மட்டக்களப்பில் இருந்து 1977ஆம் ஆண்டு பதிவுத்தபாலில் கொழும்புக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்று, கடந்த 16 வருட காலமாக எங்கெல்லாமோ சுற்றிவிட்டு மீண்டும் அதனை அனுப்பிய பெண்ணிடமே வந்து சேர்ந்துள்ளது. இக்கடிதம் இலங்கையை மட்டுமன்றி உலகின் சில நாடுகளையும் சுற்றியுள்ளது. தனது நெடுந்தூர பயணத்தின் போது அக்கடிதம் உடைக்கப்பட்டு உள்ளது. இறுதியாக மட்டக்களப்பு தபால் நிலையத்தை வந்தடைந்த அக்கடிதத்தை அதிகாரிகள் உரிய பெண்ணிடம் ஒப்படைத்தனர். கடிதம் அலைந்த காரணமும் பின்னர் கண்டுபிடிக்கப் பட்டது. தமிழில் விலாசம் எழுதி யிருந்ததே அலைச்சலுக்குக் காரணமாகும்.

www.tamilarangam.net 



# பிரேமதாசா வகுத்த கொள்கையிலிருந்து விலகிச்செல்ல ஆரம்பிக்கிறார் விஜேதுங்க!



- ஆதவன்



## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு முடிவு வருமா?

இலங்கையின் சர்ச்சைக்குரிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைப்பதற்கான அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதில் தனக்குள்ள விருப்பத்தை புதிய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா வெளியிட்டுள்ளார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் ஆற்றிய உரையொன்றில் பகிரங்கமாகவே இதனைத் தெரிவித்தார். சகல தரப்பினரதும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இவ்விடயம் குறித்து தீர்மானம் மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இலங்கையின் அரசியலமைப்பு விவகாரங்களை கவனிப்பதற்காக புதிய அமைச்சர் ஒருவரை மே மாதம் 20ஆம் திகதி நியமித்து தனது எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் விஜேயதுங்க. பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சட்டத்தரணி கே.என்.சொக்ஸி இந்த அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அரசியலமைப்பு மற்றும் ராஜாங்க அலுவல்கள் அமைச்சராக சட்டத்தரணி சொக்ஸி கடமையாற்றுவார். இப்புதிய அமைச்சர் அரசியலமைப்பு விடயங்களுக்கும், இராஜாங்க அலுவல்கள் சம்பந்தமான விடயங்களுக்கும் பொறுப்பாக இருப்பார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு பழைய தேசிய அமைப்பு முறையே இலங்கையில் மீண்டும் கொண்டு வரப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் நீண்ட காலமாக குரலெழுப்பி வருகின்றன. இவ்விடயத்தில் சாத்தியப்பாடு உண்டா என புதிய அமைச்சர் சொக்ஸி ஆராய்வார் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஜனாதிபதி பிரேமதாசாவின் சட்டத்தரணியான கே.என்.சொக்ஸி சட்டத்துறையில் ஓரளவு பிரபல்யம் பெற்றவர். முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகாவினால் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு வழக்கில் பிரேமதாசாவுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி வாதம் புரிந்தவர் சட்டத்தரணி சொக்ஸி.

ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைக்கும் அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதில் தனக்கிருக்கும் விருப்பத்தை பதவியேற்ற ஆரம்பத்திலேயே விஜேதுங்க வெளிப்படுத்தியிருந்தார்.

"புதிய அமைப்பொன்றுக்கான பல்வேறு அம்சங்களையிட்டும் நாம் கவனம் செலுத்த முடியும். பாராளுமன்றத்திற்கு தேர்தலை நடத்தி பின்னர் பாராளுமன்றத்திலிருந்து ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியும். பல்வேறு வழிவகைகள் எம்மிடம் இருக்கலாம். நாம் சகல வழிகளையும் ஆராய வேண்டும். சகலரையும் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு திட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். இதற்கென பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கலாம். பொதுமக்களின் பிரதிநிதிகளையும் நாம் அழைக்கலாம். இறுதியாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி மக்களின் ஆணையைக் கேட்கலாம்" என்று விளக்கம் அளித்திருக்கிறார் ஜனாதிபதி விஜேதுங்க.

இலங்கையின் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்படுவதற்கான அறிகுறிகள் இப்போதே புலப்படத் தொடங்கியிருக்கின்றன. அரசியலமைப்பு விவகார மற்றும் ராஜாங்க அலுவல்கள் அமைச்சர் சொக்ஸியும் இதனை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"எமது நாட்டின் தற்போதைய அரசியலமைப்பு 15 வருடங்கள் பழைமை வாய்ந்தது. மாறிவரும் காலவோட்டத்திற்கு ஏற்ப அரசியலமைப்பையும் மாற்றியமைக்கவே விரும்புகிறோம்" என்கிறார் சொக்ஸி.

இந்த மாற்றம் குறித்து ஆராயத் தொடங்கிவிட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். "விரும்பு வாக்களிப்பு' முறை குறித்து பல்வேறு விமர்சனங்கள், கருத்துகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இது பற்றி அதிகளவு சிந்திக்க வேண்டிய தருணம் இது" என்று மேலும் கூறுகிறார் அவர்.

ஜனாதிபதி விஜேதுங்கவைப் பொறுத்தவரை பொதுமக்களின் கருத்தின் படியே ஆட்சிமுறையை செயல்படுத்தும் மனோபாவம் கொண்டுள்ளார் அவர். நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை இப்போது கொண்டுள்ள சகல அதிகாரங்களையும் பிரயோகிப்பதில் தனக்கு விருப்பம் கிடையாது என்பதை அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"மக்களுடைய விருப்பங்களையே நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இந்த நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே மக்களுடைய விருப்பம்" என்று பேட்டியொன்றின் போது தெரிவித்தார் விஜேதுங்க.

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்குப் பின்னர் இலங்கையில் அரசியலிலும், பொருளாதாரத்திலும் பாரிய மாற்றங்கள் உருவாகுமென நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சியில் இருந்தபோது அனைத்து விவகாரங்களிலும் கடைப்பிடித்து வந்த தன்னிச்சையான, கடினமான போக்குகள் இப்போது தளர்த்தப்பட்டு விட்டதாக மக்கள் கருதுகிறார்கள்.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள டி.பி.விஜேதுங்க அறிவித்துள்ள சலுகைகள் நாட்டின் பெரும்பான்மை இன மக்களை மாத்திரமன்றி சிறுபான்மை தமிழர்களையும் ஈர்த்துள்ளதை பிரேமதாசாவின் படுகொலையின் பின்பான நிகழ்வுகள் உணர்த்தியுள்ளன.

பிரேமதாசாவுக்கும், விஜேதுங்கவுக்கும் இடையே குடும்பப் பின்னணியில் பாரிய வேறுபாடு உண்டு. இலங்கை அரசியலைப் பொறுத்தவரை உயர்குல பௌத்த மதத்தில் உதித்த ஒருவரே நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிப்பதற்குத் தகுதியானவர் என்ற மாயையிலிருந்து சிங்கள மக்கள் இன்னும் விடுபடவில்லை. இத்தகைய ஒரு கண்ணோட்டத்துடனேயே ஜனாதிபதி விஜேதுங்கவை சிங்கள மக்கள் உயர் அந்தஸ்தில் நிறுத்திப் பார்க்கின்றனர். இதுவே விஜேதுங்கவுக்குக் கிடைத்துள்ள முதல் தகுதியும் எனலாம்.

கண்டி சிங்கள வம்சமே இன்றுவரை இலங்கையில் அதிஉயர்ந்த குலமெனப் போற்றப்பட்டு வருகிறது. இலங்கையின் இறுதி ராஜதானியான கண்டி ராச்சியத்தின் அரசகுடும்ப வரித்தோன்றல்களே கண்டி வாழ் சிங்கள மக்கள் என்ற பரம்பரைப் பெருமை இன்றுவரை



நிலவுகிறது. இந்த வகையில் ஜனாதிபதி விஜேதுங்க மீது நாட்டு மக்கள் மாத்திரமன்றி, அரசுக்குள்ளேயும் நன்மதிப்பு வைத்திருக்கிறார்கள்.

கண்டிக்கு அருகேயுள்ள பிலிமதத்தலாவ என்ற இடத்தில் பிறந்த டி.பி.விஜேதுங்கவுக்கு வயது 71. 1946இல் இவர் ஐ.தே.க.வில் இணைந்து செயல்பட்டு வருபவர். 1942இல் கூட்டுறவு சேவையில் உத்தியோகத்தராகச் சேர்ந்த விஜேதுங்க தபால், தொலைத் தொடர்பு அமைச்சர், தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஆகிய பதவிகளை வகித்தவர். இதற்கு முன்னதான காலப்பகுதியில் அமைச்சுச் செயலாளராகவும் கடமையாற்றியவர்.

ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான ஆட்சியில் பிரதமர், நிதியமைச்சர், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஆகிய உயர்பதவிகள் விஜேதுங்கவை தேடி வந்த போதிலும், அதிகாரம் இல்லாத மனிதராகவே அரசியல் நடத்தி வந்தவர் இவர். இன்று ஜனாதிபதி பதவியும் அவ்வாறே இவரைத் தேடி வந்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் மௌனம் கலைந்த மனிதராகி விட்டிருக்கிறார் விஜேதுங்க. பதவியேற்ற நாள் முதல் ஜனாதிபதி அறிவிக்கும் புதிய புதிய மாற்றங்கள், செயல்பாடுகள் மக்களைச் சிந்திக்க வைத்திருக்கின்றன. பிரேமதாசா தனக்கென எவ்வாறான தனிப்பாணியைக் கையாண்டு வந்தாரோ அவற்றிலிருந்து இப்போது விலகிச் சென்று கொண்டிருக்கிறார் புதிய ஜனாதிபதி.

அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய முதலாவது உரையில் கவரத்தக்க அம்சமொன்றை தமிழ்மக்கள் கண்டனர். "வடக்கு கிழக்கு பிரச்சனைக்குத் தீர்வு காண்பதே இன்றைய அவசர தேவையாக உள்ளது. இதில் இராணுவத் தீர்வில் எனக்கு நம்பிக்கை கிடையாது. சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காண நான் விரும்புகிறேன்" என்று அந்த உரையில் கூறினார் விஜேதுங்க. இரண்டு தினங்கள் சென்றதும் ஜனாதிபதி இன்னும் கீழிறங்கி வந்து, மற்றொரு உரையில் "பிரச்சினையில் சமபந்தப்பட்ட நபருடனேயே நான் பேச்சு நடத்த விரும்புகிறேன். அந்த வகையில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் பேசுவதே பொருத்தமானது. நாட்டில் அமைதியை ஏற்படுத்த, பிரபாகரனுடன் பேச்சு நடத்துவதற்கு எவரேனும் உதவ முன்வருவார்களானால் மகத்தான செயலாக இருக்கும்." என்று குறிப்பிட்டார்.

விஜேதுங்கவின் இந்த மனோபாவம் வடகிழக்கு மக்களை ஓரளவு நம்பிக்கை கொள்ள வைத்துள்ளது என்பதை மறுக்க முடியாது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இத்தனை கால முயற்சியில், சிறு மாற்றம் தென்படுவதாகவே தமிழ் மக்கள் இதனை நோக்குகின்றனர். இந்த மனிதரிடம் அரசியல் நாடகங்களுக்கு இடமிருக்காது என்ற அபிப்பிராயம் அரசியல் மட்டத்தில் உறுதியாக நிலவி வருகிறது. புதிய ஜனாதிபதியின் முயற்சியை தமிழ்மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

பிரேமதாசாவின் படுகொலையின் பின்னர் தலைநகரில் தமிழ்மக்களிடையே பெரும் பதற்றம் நிலவியிருந்தது. 1983ஆம் ஆண்டு சம்பவங்களை இந்தச் சூழ்நிலை நினைவூட்டியது. ஆனால் பூரண பாதுகாப்பு தலைநகரில் ஏற்படுத்தியதுடன் தமிழ் மக்களுக்கு உத்தரவாதம் அளித்து மனதில் அடம்பிடித்திருக்கிறார் விஜேதுங்க. "நான் ஒரு அரசியல்வாதியாக செயல்பட மாட்டேன். ராஜதந்திரியாகவே செயல்படுவேன்" என ஒருதடவை அவர் கூறினார். அவரது கொள்கை நடைமுறைகள் இப்போது இலங்கையில்

(தொடர்ச்சி 17 ம் பக்கம்)

www.tamilarangam.net தந்துதவியவர்: தேசம்நெற்



# ராஜீவ் - பிரேமதாசா: வன்முறையின் அறுவடை

எஸ்.வி.ஆர்.

இரண்டாண்டுகளுக்கு முன் தமிழகத்திற்கு நேர்ந்தது அந்தப் பெரும் விபத்து. தமிழக மக்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொண்ட விபத்து. 1991-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இந்தியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, வரலாறு காணாத ஒரு மூர்க்கத்தனமான பெரும்பான்மையுடன் ஜெயலலிதாவும் அவரது கூட்டாளிகளும் வெற்றி பெறச் செய்தனர் தமிழக மக்கள். மருத்துவ சிகிச்சைக்காக எம்.ஜி.ஆர். அமெரிக்கா சென்றிருந்தபோது நடந்த தேர்தலில் அவரது கட்சிக்குக் கிடைத்ததைவிட அதிக எண்ணிக்கையிலான இடங்களை இவரது வாரிசு கைப்பற்றினார். எம்.ஜி.ஆர். உடல் நலமில்லாதிருந்த நாட்களில்தான் இந்திரா காந்தி கொலையுண்டார். அன்றும் காங்கிரஸ் அதிமுகவின் கூட்டாளிதான். இப்போது மக்கள் 'சாவுக்கு ஒரு ஓட்டு, நோவுக்கு ஒரு ஓட்டு' என வாக்களித்தனர். 1991-ல், காங்கிரஸ் வேறு உத்தியைக் கையாண்டது. டெல்லியிருந்த 'ஏக் தின் கா சுல்தான்' (ஒரு நாள் ராஜா) சந்திரசேகர் காங்கிரஸ் கட்சிக்குத் தான் ஆற்ற வேண்டிய கைம்மாறாக தி.மு.க. ஆட்சியை ஜனநாயக விரோதமாகக் கலைத்தார். பத்மநாபா படுகொலையும் விடுதலைப் புலிகளால் உருவாக்கப் பட்டதாக ஜோடிக்கப்பட்ட 'சட்டம், ஒழுங்கு' பிரச்சனையும் திமுகவிற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட துருப்புச் சீட்டுகள். அன்றிருந்தே 'புலி பீதி'யை மத்திய அரசாங்கம் அரசாங்க ஆதரவுப் பத்திரிகைகளும் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தன. கருணாநிதியின் சட்டசபை என்ற துச்சாதனன் அவையில் மானபங்கம் செய்யப்பட்ட நவீன பாஞ்சாலியாகத் தன்னைச் சித்தரித்துக் கொண்டிருந்தார் ஜெயலலிதா. அப்போதுதான் நடந்தது அந்த எதிர்பாராத குரூர நிகழ்ச்சி. வட, மத்திய இந்திய மாநிலங்களில் காங்கிரஸ் படுதோல்வியடையும் எனக் கருத்துக் கணிப்புகள் கூறிவந்த நேரம் அது. தென்னிந்தியாவிலாவது தனக்குள்ள பலத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில் தென்னிந்தியர்கள் அணியும் அங்கவஸ்திரத்தோடும், எம்.ஜி.ஆர். காலத்தில் கற்றுக் கொண்ட 'வணக்கம்', 'நன்றி' என்ற இரண்டொரு தமிழ்ச் சொற்களோடும் உற்சாகத்தோடும் தமிழகம் வந்தார் ராஜீவ். ஆனால் மனிதகுண்டால் சின்னாபின்னமாக்கப்பட்டுத் துணிப்பையில் போட்டுக் தைக்கப்பட்ட அவரது உடல்தான் டெல்லிக்குத் திரும்பியது.

*1984*- அக்டோபரில் அவரது தாயார் இந்திராகாந்தி கொலையுண்டபோது, ராஜீவின் ஆதரவாளர்கள் 'கூன் கா பத்லா கூன்' (இரத்தத்திற்கு இரத்தம்) என்று வெளிப்படையாகவே தூளுரைத்தனர். விளைவு: நவம்பர் 1 முதல் 4 வரை காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களாலேயே தலைமை தாங்கப்பட்ட வன்முறைக் கும்பல்கள் டெல்லியிலும் பிற இடங்களிலும் ஆயிரக்கணக்கான சீக்கியர்களைக் கொன்று குவித்தன; ஆயிரக்கணக்கான பெண்களைக் கைம்பெண்களாக்கின; கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அப்போது ராஜீவ் காந்திசொன்ன விளக்கம்: "ஆலமரம் அடியோடு சாயும்போது நிலம் அதிராமல் இருக்குமா?". சீக்கியருக்கு எதிரான வன்முறை பற்றி விசாரணைநடத்த இதுவரை 18 கமிஷன்களும் கமிட்டிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தைவிட கமிஷன்களுக்கு செலவிட்ட தொகைதான் அதிகம்.

இந்திரா காந்தியும் அவ்வப்போது ஒரு சில தமிழ் வார்த்தைகள் பேசுவார் – சென்னைக் கடற்கரைக் கூட்டங்களில். கறாரான, கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் அரசியல் வல்லூறு (Hawk) எனக் கருதப்பட்டவர் அவர். ஈழப் பிரச்சனையைத் தென்னாசியப் பிரச்சனையாக மாற்றியவர். அவரும் மகன் ராஜிவும் அடிக்கடி ஒரு சமஸ்கிருதச் சொற்றொடரை உதிர்ப்பது வழக்கம். "வாசுதேவ குடும்பகம்" என்பதுதான்அது. உலகமே ஒரு குடும்பம் என்பது அதன்பொருள். உலகத்தை அவர்கள் ஒரு குடும்பமாகக் கருதினார்களா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் இந்தியாவைத் தங்கள் 'குடும்பமா'க அதாவது தங்கள் தனிச் சொத்தாக – அவர்களது குடும்பம் கருதியது என்பதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லை. இந்திராவுக்கும் ராஜீவுக்கு மிகுந்த 'தமிழறிவு' சஞ்சய் காந்திக்கு இருந்ததா என்பது தெரியவில்லை. ஆனால் கட்டாயம் அவர் தமிழ் 'கெட்ட வார்த்தை'கள் (Four Letter Words) தெரிந்து வைத்திருப்பார் என நம்பலாம். அத்தகைய சகவாசம் அவருடையது. அவர் கொலை



செய்யப்படவில்லை. மாறாக அவரது தான்தோன்றித்தனமும் துடுக்கும் சேர்ந்து அவரது உடலையும் துணிப்பையில் போட்டுத் தைக்கும்படி செய்துவிட்டன.

இந்திரா, ராஜிவ், சஞ்சய் ஆகியோரைவிட அதிகமாகத் தமிழ் தெரிந்தவர் லலித் அத்துலத்முதலி. நீலன் திருச்செல்வம், 'இந்து'நாளேட்டில் 11.3.93 அன்று எழுதியுள்ள கட்டுரையின்படி ஒரு தமிழாசிரியரை அமர்த்தித்தமிழ் கற்றுக் கொண்டுவந்தாராம் லலித். தனது அமைச்சகத்தைச் சேர்ந்தவர்கள் ஏதோ ஒரு இடத்தில் தமிழில் பெயர்ப் பலகை வைக்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிபரின் செயலகத்திலிருந்து (Mobile Presidential Secretriat) வெளியேறினாராம்!



பிரேமதாசாவின் தமிழறிவைப் பற்றித் தெரிந்துகொள்ள நீலன் திருச்செல்வனின் உதவி நமக்குத்தேவையில்லை. தமிழர்கள் கணிசமாக உள்ளபகுதிகளில் நடக்கும் பொதுக் கூட்டங்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் அவர் தமிழில் தனது உரையைத் தொடங்குவது வழக்கம். எப்படியிருந்தாலும் அவர் சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து நாட்டின் மிக உயர்பதவிவரை உயர்ந்தவர். தமிழ், சிங்களம் ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று லலித்தும் பிரேமதாசாவும் கருதியதாக நீலன் சொல்கிறார். எனினும் அவர்களிருவரின் பேச்சாற்றல் பற்றி நீலன் (மிக உணர்ச்சிகரமாக) எழுதியிருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

இப்படித் தமிழ்மீது அக்கறை காட்டிவந்த தலைவர்களும் (இங்கு சஞ்சய் காந்தியை விட்டுவிடுவோம்). தமிழுக்குத் தொடர்பில்லாத, அல்லது அதில் அக்கறை காட்டாத தலைவர்களும் (பண்டாரநாயக்கா, முஜிபுர் ரஜிமான் ஜியாவுல் ஹக், ஜெனரல் ஜியா ஆகிய தென்னாசிய அரசியல் தலைவர்களும்) கடந்த காலத்தில் கொலையாளியின் கரங்களிலேயே மடிந்துள்ளனர். இதில் பூட்டோவையும் சேர்த்துக் கொள்ளலாம். பாகிஸ்தான் 'நீதிமன்ற விசாரணைக்கு'ப் பிறகு அவர் தூக்கிலிடப்பட்ட போதிலும் அதனையும் அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்ட கொலையாகவே நாம் கருதவேண்டும்.

இந்திரா காந்தி கொலையுண்டபோது சீக்கியர்களும், ராஜிவ் காந்தி கொலையுண்டபோது சீக்கியர்கள், காஷ்மீரிகள்,நாகர்கள் ஆகியோரும் இனிப்பு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்த செய்திகள் உண்டு. பிரேமதாசா கொலையுண்ட போது அந்த நிகழ்ச்சி சிங்களப் பகுதிகள் பலவற்றில் பட்டாசு வெடித்துக் கொண்டாடப்பட்டதாக சிறிலங்காவிலிருந்து வந்த செய்திகள் கூறின. எனவே மறைந்த தலைவர்களுக்கு சூட்டப்பட்ட புகழாரங்களுக்குப் பின்னே ஒளித்திருந்த உண்மை, அவர்கள் அப்படியொன்றும் தங்கள் நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவையும் அன்பையும் பெற்றிருந்தவர்களல்லர் என்பதுதான். கடந்த நாற்பதாண்டுகளில் கொலையுண்ட தென்னாசியத் தலைவர்கள் அனைவருமே வர்க்க, சாதிப் பின்னணிக்கும் உணர்வுக்கும் மிகுந்த முக்கியத்துவம் தரும் சமுதாயங்களையும் அரசியல் பண்பாடுகளையும் சேர்ந்தவர்கள். இத்தகையதொரு பின்னணியில் பிறந்து வளர்ந்தவரும், தாழ்ந்த சாதியையும் ஏழைக் குடும்பத்தையும் சேர்ந்தவருமான பிரேமதாச தனது விடாமுயற்சி, உறுதிப்பாடு, கடும் உழைப்பு ஆகியவற்றின் மூலம் நாட்டின் அதிபர் என்ற நிலைக்கு உயர்ந்தது மிகவும் பிரமிக்கத்தக்க சாதனைதான். அத்தகைய திறமைமிக்க மனிதர் அரசியலில் ஈவிரக்கமற்றவராகவும் சூழ்ச்சிகளையும் சதிகளையும் தயக்கமின்றி மேற்கொள்பவராகவும் விளங்கினார். அதிகாரமனைத்தையும் தன் கையில் குவித்துக் கொண்டு, தனது கட்சிக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வந்த போட்டிகளையும் சவால்களையும் நசுக்கி வந்த அவர், தனது குறிக்கோள்களைச் சாதிக்க எத்தகைய வழிமுறைகளையும் எத்தகைய நபர்களையும் பயன்படுத்தத் துணிந்தார். இந்த வகையில் அவர், உடனடியான ஆதாயங்களில் மட்டுமே கவனம் குவித்து, நிறுவனங்கள், விழுமியங்கள் பற்றிக் கவலைப்படாதிருந்த பிற (கொலையுண்ட) தென்னாசிய அரசியல் தலைவர்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவரல்லர்.

மறைந்தவர்களைப் பற்றிக் கடுமையான வார்த்தைகள பேசுவது கண்ணியக் குறைவான செயல்தான். ஆயினும் ஏழு தென்னாசிய நாடுகளில் அரசியல் காரணங்களுக்காக ஒன்பது தலைவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்தும், அத்தகைய கொலைகளுக்கும் கொலையுண்டவர்களின் அரசியலுக்கும் ஆளுமைகளுக்குமுள்ள தொடர்பு பற்றியும் பேசாமல் இருக்க முடியாது. "தலைவர்களைக் குண்டு துளைக்க முடியாது என்பது சாத்தியமில்லை. ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தைக் குண்டு துளைக்காது" என்ற அரசியல் மொழி ஒன்று உண்டு. ஆனால் தேர்தல்களின் போதும் பிற சமயங்களிலும் பணபலமும் குண்டர் பலமும் சேர்ந்து விளையாடும் அரசியல், அரசியலமைப்புச் சட்டத்தை அரித்துத் தின்றுவிடுகிறது. பிரேமதாசாவுக்குப்

(அடுத்த பக்கம் பார்க்க)

www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்



பெரும் சவாலாக விளங்கிய லலித் ஏப்ரல் மாதம் கொலையுண்டபோது, எதிர்க்கட்சிகளின் சுட்டுவிரல்கள் பிரேமதாச இருந்த திசையில்தான் நீண்டன. அப்போதே 'பழிக்குப் பழி' என்ற சாத்தியப்பாடு உருவாகியிருந்தது. சிறிலங்கா இராணுவ அமைச்சரும் அதன் பின்னர் இராணுவத் தலைமைத் தளபதியும் கொல்லப்பட்டபோதும் கூட, அவை பிரேமதாசவின் கைவரிசைதான் என சந்தேகிக்கப்பட்டன. ஆனால் சிங்கள அரசியல் புரையோடிப் போவதற்கான காரணங்களை அந்த அழகிய தீவைச் சேர்ந்த மக்கள் ஆழமாகப் புரிந்து கொள்வதற்குத தடையாக ஒவ்வொரு முறையும் புலிப்பூச்சாண்டியைக் காட்டுவதே வழக்கமாக இருந்து வருகிறது. பிரேமதாசவைக் கொன்றது புலிகள்தாம் என்று அவருக்குப் பின் பதவியேற்றவரோ அல்லது சிங்கள எதிர்க் கட்சிகளோகூடத் திட்டவட்டமாகக் கூறவில்லை. பிரேமதாசாவின் எச்சங்களாகச் சிங்கள பொலீசாரின் கைக்கு அகப்பட்டவை அவரது மூக்கும் பச்சைத் தொப்பியும் (அன்று ஊர்வலத்தில் வந்த ஆயிரக்கணக்கான பச்சைத் தொப்பிகளில் அவரது தொப்பியை சரியாகக் கண்டு பிடித்த சாமர்த்தியம்தான் என்னே!) கைக்கடிகாரமும் தான். அப்படி அவரைச் சிதைத்திருக்கிறது குண்டு. ஆனால் அந்த மனித குண்டுகளின் தலை, சயனைட்குப்பி, அடையாள அட்டை ஆகியனமட்டும் அப்படியே இருந்தனவாம்! 'நுன்மாண் நுழைபுலம் மிக்க' இந்து நாளேடு இதை வைத்து புலிகளைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி தண்டனையும் வழங்கிவிட்டது!

இந்தத் தென்னாசிய நாடுகளின் அரசாங்கங்களும் அவற்றின் தலைவர்களும் தமது நாடுகளை அகிம்சையில் உறைவிடமாகச் சித்தரிக்கின்றவர்.இந்தக் கூற்றுக்குச் சான்றாக வேதங்களும் தம்மபாதமும் ஆதிகிரந்தமும் குர்ரானும் மொழியப்படுகின்றன. காந்தியின் பெயரைச் சொல்லாத தலைவர்களே இல்லை. இந்தியாவின் குடியரசுத் தலைவர்களில், 'தத்துவஞானி'களும் "ஆன்மீகவாதி'களும் உண்டு. அவர்களும் பிரதம அமைச்சர்களும் ஆன்மீக வழிகாட்டுதலுக்காக காஞ்சி சங்கராச்சாரியாரின் கால்களில் விழுவதும் உண்டு. புத்தனின் அருள்வேண்டி இந்தியப் தலங்களுக்கு பிரேமதாச வந்ததுண்டு. பிற கடவுள்களில் அருளைப்பெற அவர் கோவில்களிலும் மசூதிகளிலும் மாதா கோவில்களிலும் பிரார்த்தனை செய்திருக்கிறார். ஆயினும் அவரும் கொலையுண்ட பிற தென்னாசியத் தலைவர்களும் வன்முறை அரசியல், அரசியல் மோதல்கள், எதேச்சாதிகாரம், குறுகிய இனவாதம், மத உணர்வை அரசியலாக்குதல் ஆகியவற்றை ஊக்குவித்து வந்தனர். இவை தம் பங்குக்கு அரசியல் கொலைகளை ஊக்குவிக்கின்றன. அப்படிக் கொலையுண்டவர்களின் உடல்கள் குரூரமாகச் சிதைந்து சிதறிக் கிடப்பதைக் கண்டு மனித நாகரிகம் வெட்கித் தலை குனிகிறது. ஆனால் மனித உயிர்கள் மலிவாகிப் போவதற்கு அந்தத் தலைவர்கள்தான் முக்கிய காரணம். மனித உரிமை மீறல்கள் அவர்களது ஆட்சியில்தான் அத்துமீறிப் போயுள்ளன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் முடிமன்னர்களைப் போல நடந்து கொள்கின்றனர். ('சிற்றரசி' ஜெயலலிதாவை நினைத்துப் பாருங்கள்). எனவே அவர்களுக்கு எந்தளவுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டாலும் அவர்களால் 'Bullet Proof' ஆக இருக்க முடியாது. இப்படிச் சொல்வதன் பொருள் பயங்கரவாத நடிவடிக்கைகளை ஆதரிப்பது என்பதல்ல. இத்தகைய பயங்கரவாதச் செயல்கள் தென்னாசிய அரசியல்வாதிகள் வெகுஜனங்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள மிகப் பரவலான வன்முறையின் தவிர்க்க முடியாத அறுவடை என்பதுதான் அதன் பொருள்.

இந்திராகாந்தியிலிருந்து பிரேமதாச வரை அவர்கள் அனைவருமே தங்கள் ஆதரவாளர்கள் சமுதாயத்தின் வேர்க்கால் மட்டங்களில் வன்முறையைக் கடைப்பிடிப்பதையும் அரசியல் பணிகள் குண்டர்களின் கரங்களுக்குச் செல்வதையும் தயக்கமின்றி அனுமதித்தனர். (சஞ்சய் காந்தி, தான் செல்லுமிடமெல்லாம் நாஜி இளைஞர் படையை (Nazi Storm Troopers) ஒத்த காடையர்களை அழைத்துச் செல்வது வழக்கம். ஒருமுறை டெல்லி உச்ச நீதிமன்றத்தின் பதிவாளர் அறைக்கு அவர் தனது கூட்டாளிகளை இட்டுச் சென்று அங்கிருந்த ஆவனங்களையெல்லாம் பிடுங்கிக் கிழித்தெறிந்தார். (மற்றொரு வழக்கு மன்றத்தில் ஒரு பொலீஸ் காவலரை நையப்புடைத்தார்). போஃபர்ஸ், கப்பல் பேர ஊழல் என ஏராளமான ஊழல்களின் நாயகனாகத் திகழ்ந்தார் ராஜிவ். அவரது தாயாரோ முதலில் தனது சொந்தக் கட்சி ஸ்தாபனம், பிறகு நீதித்துறை, அரசாங்க அமைப்புகள், நாடாளுமன்றம் போன்ற ஜனநாயக நிறுவனங்கள் ஒவ்வொன்றையும் உடைத்து நொறுக்கி அவற்றை மதிப்பிழக்கச் செய்தார். இத்தகைய தலைவர்கள் தங்களால் தொடர்ந்து வெகுஜனத் தலைவர்களாக விளங்கமுடியும் என்றும் மக்களை நேரில் சந்தித்து அவர்களோடு கலந்துவிட முடியும் என்றும் நினைத்துத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டனர். அவர்கள் எல்லாருமே முகஸ்துதிகளுக்கு எளிதில் இரையாகித் தாங்கள் தேசம் முழுவதன் அன்புக்குப் பாத்திரமானவர்கள் என்று எண்ணியவர்கள். அவர்கள் தம் வாழ்நாளில் ஊக்குவித்த வன்முறைகள், வெகுஜன அரசியலைப் பண்பலத்தோடும் குண்டர் பலத்தோடும் இணைத்தமை ஆகியன அவர்கள் உயிருடன் இருந்தபோதும் சரி அல்லது பலாத்காரமாக இவ்வுலகிலிருந்து அகற்றப்பட்டபோதும் சரி, அவரவர் நாட்டிற்கும் மக்களுக்கும் சொல்லொணாத் துயரங்களையும் தீர்க்க முடியாத பிரச்சனைகளையுமே உருவாகியுள்ளன. சார்க் மாநாடுகளிலும் சரி, பிற உலக அரங்குகளிலும் சரி 'அகிம்சை', 'அமைதி' 'உலகம் சமாதானம்' என்று பேசுகிற தென்னாசியத் தலைவர்கள் அவற்றை முதலில் தம் சொந்த நாடுகளில் கடைப்பிடிப்பார்களா?

## உரைகல்

அன்புடையீர்,

ஈழத்தில் உருமாறிய பழமொழிகள் பற்றிய கட்டுரையிற் தரப்படும் விளக்கங்கள் சுவையாக இருக்க வேண்டும் என்று கருதி எழுதப்படுவன போற் தெரிகிறது. தமிழில் விஞ்ஞானம் பற்றிய கட்டுரைகளும் இவ்வாறே சுவை கருதித் தகவல்களைத் தவறாகத் தருவதைக் கண்டுள்ளேன். திரு.செல்வராஜாவின் கட்டுரையில் அவரது ஊகங்கள் எவை என்பதைச் சில இடங்களிற் தெளிவாகச் சொல்கிறார் வேறு இடங்களில் அவ்வாறில்லை. 'அஞ்சிற்கு இரண்டு பழுதில்லை' என்ற பழமொழி விளக்கத்தில்அவர் அகலிகை, தாரா, திரௌபதி, மண்டோதரி, சீதா ஆகிய ஐவரும் தமிழிலக்கியங்களிற் 'கற்புக்கரசிகளாகப்' போற்றப் படுவதாக எழுதியுள்ளார். 'கற்பு' பற்றிய எனது அபிப்பிராயம் ஒரு புறமிருக்க, எப்போது முதல் அகலிகை கற்புக்கரசியாகக் கருதப்பட்டாரென்று தெரியவில்லை; மேற்குறிப்பிட்ட ஐவரும் எந்த அடிப்படையிற் தெரியப்பட்டனரோ தெரியவில்லை. ஏதாவது ஒரு சஞ்சிகையில் வந்ததால் மட்டும் விஷயம் உண்மையாகி விடுமா? 'ஸ்ரீராம் கிருஷ்ண விஜயம்' சஞ்சிகையில் மேற்படி விஷயத்தை எழுதியவர் யார்? அவர் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அதை எழுதினார்? கட்டுரை ஆசிரியர், ஆய்வுக்கும் அரட்டைக்கும் அண்டப் புளுகுக்கும் இடையே கொஞ்சம் வேறுபாடு கண்டு விஷயங்களை வழங்குவராயின் நல்லது.நிற்க -என்றைக்கு அகலிகையின் உணர்வுகளைப் பாரத சமுதாயம் மதிக்கக்கற்கிறதோ, அன்று தான் அது தன் பெண்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்கத் தொடங்குகிறது என்பது என் எண்ணம். அம்மி மிதிப்பதை நாம் கைவிடாதவரை அவமதிக்கப்படுபவர் அகலிகை மட்டுமல்ல, முழுப் பெண்னினமுமே தான்.

அன்புடன், சி.சிவசேகரம்

15ஆவது ஆண்டு நிறைவு

தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின்
15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

19 ஜூன் 1993
சனிக்கிழமை, மாலை 6 மணி முதல்

நாடகவிழா 93 - 1

SOUTH NORWOOD CENTRE
SANDOWN ROAD
SOUTH NORWOOD LONDON SE 25
BRITISH RAIL: NORWOOD JUNCTION
FROM EAST CROYDON - BUS 197, 132

பிரவேசம்: £ 3.00
சிறுவர்கள் இலவசம்

நாடகங்கள்:
மழை
பாரததர்மம்
நம்மைப் பிடித்த பிசாசுகள்
(பிறன்ற் தமிழ் பாடசாலை மாணவர்கள்)

நெறியாள்கை:க.பாலேந்திரா

இவ்வருட நிகழ்ச்சித் தொடரில்......
நாடக விழாக்கள், நடன, இசை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள்,
பயிலரங்கங்கள், கண்காட்சிகள், நூல் வெளியீடுகள் என்பன இடம்பெறவுள்ளன.

விபரங்கட்கு : 081 - 459 4335 / 081 - 470 7883

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்



'வெறும் 'பென்'னை நம்பி (பேனா) எழுதத் தொடங்குபவன் சாதா கவிஞன் ஆகின்றான. ஒரு 'பெண்'ணை எண்ணி 'பென்'னை (பேனா) தொடுபவன் சாகா கவிஞன் ஆகின்றான்.'

'பொறுத்தாள்வதில் பெண் பூமா தேவி போன்றவள்'

1. பெண்களிடம் இருக்க வேண்டிய நற்குணங்களில் சிறப்பு மிக்கது எது?

'பொறுமை எனும் நகைதனை எப்பொழுதும் அணிந்து கொண்டிருக்க வேண்டும்.

2. பெண்களிடம் இருக்கக் கூடாதது எது? 'அகம்பாவம்'

3. பெண்களின் கண்ணீர் எத்தகையது?

நினைத்த காரியத்தைச் சாதிக்க கூடியது. சில புதிய வரலாறுகளையும் உருவாக்கி விடக்கூடும்.

4. பெண்ணின் உண்மையான மகிழ்ச்சி நேரங்கள் எவை?

கணவனின் முழு அன்பில் கிடைக்கும் அரவணைப்பின் போது: தான் பெற்ற செல்வத்தை அள்ளி அணைக்கும் போது: இப்படி.....

5. ஆண்களின் பலவீனம் எது? பெண்களின் பலம் எது?

ஆண்களின் பலவீனம் சலனம். பெண்களின் பலம் பெண்மை.

6. அலங்காரத்தில் மூழ்கிக் கிடக்கும் பெண்: அகங்காரத்தில் மூழ்கிக் கிடக்கும் பெண்:

இவர்களைப் பற்றி: அலங்காரப் பெண் பணத்தையும் நேரத்தையும் விரயம் ஆக்குவாள். அகங்காரப் பெண் தன் வாழ்க்கையையே அல்லவா வீணாக்குகின்றாள்.

7. மனத்தின் சுமைகளை இறக்கி வைக்க ஒரு நல்ல சுமை தாங்கி எது?

அன்புத் தலைவன் காதல் மனைவி.

8. எதற்கும் பிடிவாதம் செய்யும் பெண்ணை (மனைவியை) எப்படித் திருத்துவது?

வாதத்துக்கு மருந்து உண்டு. பிடி வாதத்துக்கு மருந்து இல்லை.

9. கணவன் இன்றைய மனைவியிடம் எதை எதிர்பார்க்கக் கூடாது?

செலவுக் கணக்குகளை.

10. பெண்களின் தாம்பத்ய வாழ்வில் அதிகம் விரிசல் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன?

சின்ன சின்னக் காரியங்களில் கூட விட்டுக் கொடுக்காத மனப்பான்மை.

11. வாழ வேண்டிய முறையில் வாழாமல் வாதம் செய்தே வாழும் பெண்கள் பற்றி?

யானை தன்தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போலத் தான்.

12. பெண்களால் எளிதில் செய்ய முடியாதவை?

மாமியார் கணவன் பேச்சுக்கு எதிர் பேசாமல் இருப்பது.

13. இல்லறம் நல்லறமாக விளங்க பெண்ணின் பங்கு என்ன? ஆணின் பங்கு என்ன?

பெண்ணின் பங்கு மௌனம்: ஆணின் பங்கு பொறுமை.

14. கணவனை அடக்குவது - கணவனிடம் அடங்குவது எது சிறந்தது?

அடக்கம் ஆயிரம் பொன்னுக்குச் சமம். அடக்குவது தனக்குத் தானே குழிபறிப்பது.

15. பெண்ணிடம் கேட்கக் கூடாத கேள்வி?

நீ அழகான மேக்கப்புடன் இருக்கக் கூடாதா?

16. மனைவிக்குக் கூறும் அறிவுரை?

ஒரு மனைவி தன் கணவனிடம் உள்ள குறைகளை உறவினராக இருந்தாலும் கூறக்கூடாது. ஆண் மனத்தின் நெருக்கத்திற்கான நிஜங்கள் வெறும் வாய்

வார்த்தைகளில் இல்லை என்பதை மனைவி உணர வேண்டும்.

## மனைவி:

'மனைவியைத் தெரிந்து எடுப்பதிலும், யுத்த களத்தைத் தேர்ந்து எடுப்பதிலும் ஒரு முறை தவறு செய்துவிட்டால், மறுமுறை அதை நிவர்த்தி செய்ய முடியாது.'

'மனைவியைப் பற்றி குறை சொல்பவன் தன்னையே இழிவு செய்கின்றான்.'

'ஒழுக்கமுள்ள மனைவியே உலகின் மேலான செல்வம்.'

'ஊமையான மனைவி அவள் கணவனிடம் அடிபடுவது இல்லை.'

'மனைவி மக்களோடு வாழ்கின்ற இல்லறம் இனிமையான சங்கீதத்துக்கு சமம்.'

'மனைவி கணவனை நண்பனைப் போல் நேசிக்கவும் வேண்டும். அதேபோல் பகைவனைப் போல எண்ணி அவனுக்கு அஞ்சி நடக்கவும் வேண்டும்.'

'அன்பு மனைவியை அடிமையாகக் கருதி அடிக்காதீர்கள். அதுவும் ஒரு பாவம்.'

'மனைவி மீது உங்களுக்கு உரிமைகள் இருப்பது போல் மனைவிக்கும் உங்கள் மீது உரிமை உண்டு.'

'மனைவி இல்லாதவன் ஏராளமான செல்வம் இருந்தும் ஏழையே! அவ்வாறே கணவன் இல்லாத மனைவியிடம் எவ்வளவு செல்வம் இருந்தும் அவளும் ஏழையே!'

'மனைவியை வெறுக்காதீர்கள. அவளுடைய ஒரு கெட்ட குணம் பிடிக்கவில்லையானால் அவளிடம் உள்ள வேறொரு நல்ல குணத்துக்காக அவளை நேசி".

'மலர்ந்த முகத்துடன் துலங்கும் மனைவியே குடும்பத்தின் குத்து விளக்கு'.

'நல்ல மனைவியை அடைந்தவன் முட்டாளாக இருந்தாலும் அறிஞனாகி விடுகின்றான்! தவறான மனைவியை அடைந்தவன் அறிஞனானாலும் முட்டாளாகி விடுகின்றான்'.

'மனைவியின் புனித காதல், காவியத்துக்குச் சுவையான கவிதை'.

'மனைவி கணவனுக்கு அடிமை அல்ல. அவள் அவனுக்கு தோழியும், துணைவியும், தாயும், மந்திரியும், தெய்வமும் ஆகின்றாள்'.

'விட்டுக் கொடுக்க வேண்டியதை விட்டுக் கொடுத்து, பிடித்துக் கொள்ள வேண்டியதைப் பிடித்துக் கொள்பவளே புத்திசாலியான மனைவி'

'மனைவி வெறும் படுக்கை அறை சுகத்துக்கு மட்டுமல்ல! அறிவு சொல்வதில் நன் மந்திரி, அரவணைக் கையில் அன்புத் தாய், காதல் ஆளு கையில் ஆசை நாயகி, குடும்பத்தைக் காப்பதில் தெய்வம். எங்கோ இருக் கும் சொர்க்கத்தை வீட்டிற்குள் காட்டும் அன்புத் தேவதை.'

'மனைவியின் காதலைக்கண்டெடுத் தவர்களுக்கு அது சொர்க்கம். கண்டு எடுக்காதவர்கட்கு சொர்க்கத்தைக் கண்ணிருந்தும் பார்க்க முடியாத குருடர்கள்.'

'இதய பூர்வமாக நேசிக்கும் மனைவி யுடன் பகிர்ந்து கொள்ளும் தனிமைச் சுகத்திற்கு ஈடானது உலகில் எதுவும் இல்லை.'

மனைவிக்கு எத்தனை பலமோ ஆத ரவோ இருக்கலாம். ஆனால் மிகப் பெரிய பலம் கணவனின் ஆதரவுதான்.


SINTHU INTERNATIONAL
YOUR SHOP

குதூகல திறப்பு விழா

6 ஜூன் 1993

இலங்கை, இந்திய மரக்கறி வகைகள், தமிழ் ஹிந்தி "Audio "கசட்டுகள் , "C.D"க்கள்
கல்யாண அலங்காரப் பொருட்கள் பூமாலைகள் ஆகியவற்றிற்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

உங்களின் தேவை அறிந்து சேவையாற்ற காத்திருக்கிறோம்

SINTHU INTERNATIONAL
105 RUSHEY GREEN, CATFORD, LONDON SE6 4AF PHONE 081 695 1114



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net தந்துதவியவர்: தேசம்நெற்



# மதுரை ஜி.எஸ்.மணியின் கர்நாடக இசையும் சினிமாவும்

ஜெயந்தி





**Vol 1 and**
(மோஹனா காஸட்ஸ் MACS Looh) ஒவ்வொன்றும் ரூ.30/-

**Vol 1**
கல்யாணி
கானடா .
கௌரி மனோஹரி
காம்போதி
புன்னகை வராளி
கரகரப்ரியா
சஹானா
பாகேஸ்வரி
ஜோன்புரி
**Vol 2**
சண்முகப்ரியா
மாயமாளவகௌளை
(தவறாக மாயாமாளவகௌரி என்று அச்சிடப்பட்டுள்ளது.)
ஹிந்தோளம்
சாருகேசி
குறிஞ்சி
கீர்வாணி
பந்துவராளி
மோகனம்
சிந்து பைரவி

இந்த காஸட்டுகளின் மூலம் திரைப்பட இசைக்கும் கர்நாடக இசைக்கும் இடையே ஓர் பாலம் அமைக்க முயற்சி செய்திருக்கிறார் ஜி.எஸ்.மணி. பழைய சினிமாப் பாடல்கள் எவ்வளவு அற்புதமான மெட்டுக்களில் அமைந்திருக்கின்றன என்பதை நமக்குச் சொல்கிறார். அதே சமயம் கர்நாடக இசை என்றாலே அது சாதாரணமானவர்களுக்கு எளிதில் புரியாத விஷயம் என்ற தவறான அபிப்பிராயத்தை தகர்க்கவும் செய்கிறார்.

பல்வேறு கர்நாடக ராகங்களைப் பற்றிக் கூறி அவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள சினிமாப் பாடல்களையும் பாடிக் காட்டுகிறார். ஒவ்வொரு ராகத்தின் தன்மையையும் அழகாய் விளக்கியுள்ளார். உதாரணத்திற்கு கல்யாணி என்றால் மங்களகரமான ராகம் என்றும் கானடா சுகபாவம் உள்ளது என்றும் கௌரிமனோஹரி ஒரு விஷயத்தை பிரகடனம் செய்யும் ராகம் என்றும் கூறுவது சுவையான தகவல்கள். அவர் பேசுகின்ற விதமும் இனிமையாகவே உள்ளது.

சில ராக நுணுக்கங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். ராகங்கள் உருவெடுக்க உதவும் அடிப்படை ஸ்வரங்களையும் அவற்றுக்கு உயிர்கொடுக்கப் பாட வேண்டிய முறைகளையும் பற்றி விளக்குகிறார். இவற்றுக்கு உதாரண்மாக சில சினிமாப் பாடல்களைத் தேர்ந்து எடுத்துப் பாடியுள்ளார். கல்யாணி ராகத்தில் அமைந்த "மன்னவன் வந்தானடி", "முகம் பார்க்கலாம்" கௌரி மனோஹரியில் அமைந்த "பாட்டும் நானே பாவமும் நானே...." சிந்து பைரவியில் "வதனமே சந்திர பிம்பமோ", கரகரப்ரியாவில் "மகாராஜன் உலகை...", சண்முகப்ரியாவில் "மறைந்திருந்து பார்க்கும்" என்ற பல பாடல்களை அடுக்கிக் கொண்டே போகிறார். சினிமாப் பாடல்களைப் பற்றிக் கூறும் போதே அந்தந்த ராகத்தில் உள்ள பிரபலமான கர்நாடகக் கீர்த்தனைகளையும் அவர் பாடிக்காட்டுவது இக்காஸட்டுகளின் மற்றொரு சிறப்பு அம்சம். ஓரிஜினல் சினிமாப் பாடல்களையே பதிவு செய்திருந்தால் இந்தக் காஸ்ட்டுகள் மேலும் நன்றாக அமைந்திருக்கும். பாடல்களை அசல் வடிவத்தில் உபயோகிப்பதில் "காப்பி ரைட்" பிரச்சனையிருந்திருக்கலாம். இந்தப் பாடல்களை பி.யு.சின்னப்பா, டி.ம்.சௌந்தர்ராஜன், எம்.கே.டி.பாகவதர், பி.சுசீலா போன்றவர்கள் பாடியதனாலேயே பிரபலமாயின என்று சொன்னால் அது தவறாகாது. அப்படியிருக்கையில் ஜி.ஸ்.மணி பாடியவர்களின் பெயர்களைக் கூட குறிப்பிடவில்லை. மேலும் இசை அமைத்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடாததும் பெரும் குறை. (அதுவும் இசைஅமைப்பாளர் எம்.ஸ்.விஸ்வநாதனிடம் இரண்டு வருடங்கள் உதவியாளராகப் பணிபுரிந்த மணி இந்தத் தவறை தவிர்த்திருக்க வேண்டும்.)

கர்நாடக இசையுடன் ஏற்கனவே பரிச்சயம் உள்ளவர்களுக்கு இந்த காஸ்ட்டுகள் மேலும் சந்தோஷம் அளிக்கும். ஏனென்றால் கே.வி.மகாதேவன், ஜி.ராமநாதன், சுப்பையா நாயுடு, எம்.எஸ்.விஸ்வநாதன், ராமமூர்த்தி போன்றவர்கள் அமைத்த மெட்டுக்களை கேட்டு வளர்ந்த தலைமுறையினர் பெரும்பாலும் கர்நாடக இசையை விரும்புபவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் இன்றைய இளையராஜா இசையுடன் மட்டும் பரிச்சயம் உள்ளவர்களுக்கு இந்த காஸ்ட்டுகள் சுவாரசியமாய் இருக்குமா என்பது தெரியவில்லை. ஏனென்றால் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள பாடல்கள் அனைத்தும் பழைய சினிமாப் பாடல்கள்தான்.

இந்த காஸட்டுகளில் இருவர் குரல் ஒலிக்கின்ற போதிலும் மதுரை ஜி.எஸ். மணியின் பெயர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. உடன் பாடிய பெண் யார் என்று தெரியவில்லை. அதேபோல பக்க வாத்தியங்கள் வாசித்தவர்களின் பெயர்களும் இல்லை. இக்குறைகள் இருந்தபோதிலும் பழைய சினிமாப் பாடல்கள் மூலமாக கர்நாடக இசையில் நமக்கு ஒரு ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் இந்தக் காஸட்டுகள் வெற்றியடைகின்றன என்பதை சொல்லித்தான் தீர வேண்டும்.


KARATE



Learn the world's finest art of
SHOTOKAN KARATE
the easy way for self defence,
confidence and fitness
at the following centers

St. JOHN'S COMMUNITY HALL
St.Johns Road, Isleworth
(Tuesdays and Fridays 7.00 p.m. to 8.45 p.m.)

TRINITY CENTRE HALL,
East Lane, EastHam E6
(Mondays and Thursdays 7.15 p.m. to 9.15 p.m.)

St.AUGUSTINES CHURCH HALL
Broadwater Road, Tooting SW 17
(Wednesdays 7.00p.m. to 8.30p.m.)

ALPERTON HIGH SCHOOL
Alperton, Wembley
(Sundays 11.00a.m. to 1.00 p.m.)

OPEN FOR MEN AND WOMEN OF ALL AGES
Well experienced instructors who created champions in the past
CHIFF INSTRUCTOR : S.GANESHALINGAM
COME ALONG ON TRAINING NIGHTS OR PHONE
081 - 569 9416

www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்



# அரசியல் களத்தில் பொறுக்கி எடுத்தவை

"வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வொன்று காணப்பட வேண்டும். இதற்காக நான் சம்பந்தப்பட்ட நபருடனேயே பேச விரும்புகிறேன். பிரபாகரனுடன் பேசுவதற்கு யாரேனும் உதவி புரிவதாக இருந்தால் அது மகத்தான ஒரு செயலாக இருக்கும்."

**- புதிய ஜனாதிபதி விஜேதுங்கா**

"யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை அன்று 9500 புத்தகங்களுடன் தீவைத்துக் கொளுத்தியவர்கள் இன்று ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

**- ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஒஸி அபேகுணசேகர**

"இலங்கையில் மீண்டுமொரு இனக்கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களை துன்புறுத்தலாமென்று தீயசக்திகள் முயற்சி செய்கின்றன. எமது ஆட்சியில் மீண்டுமொரு இனக்கலவரம் ஏற்பட ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்"

**- புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க**

"அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு உரிமைகள் ஏதும் வழங்கப்பட்டால் அதனைப் பாதுகாக்க என்றும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

**- நவசமசமாஜ கட்சி தலைவர் வாசுதேவ நாணயக்கார**

"பொலிசார் இப்போது ஜனநாயக விழுமியங்களை உணர்ந்து விட்டார்கள். அரசாங்க கட்சி சுவரொட்டிகளை பொலிசார் ஒட்டிய காலம் மலையேறி விட்டது."

**-ஐ.ஐ.தே.மு. உபதலைவர் காமினி திசாநாயகா**

"எதிர்க்கட்சியை மக்கள் ஆதரித்தால் சீனி இன்றி தேனீர் குடிக்க வேண்டிய காலம் வரும்"

**-பிரதமர் ரணில்**

"நாட்டில் காடைத்தனம் செய்வது யாரென்று சிங்கள மக்களுக்கு இப்போது தெரிந்து விட்டது".

**-ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி**

"நான் மீண்டும் அரசியலில் ஈடுபடுவேனா என்று கேட்டு அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ணமுள்ளன. அரசியலில் ஈடுபடும் நோக்கம் எனக்கு கிடையாது."

**- முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.**

"ஜெயலலிதாவின் அரசாங்கத்தை கவிழ்க்கும் சதி எதுவும் எம்மிடம் கிடையாது."

**- இந்திய பிரதமர் நரசிம்மராவ்**

"நியாயமாகப் பார்த்தால் ஐ.தே.க.வில் சிரேஷ்ட அமைச்சரான ஏ.சி.எஸ். ஹமீதுவுக்குத்தான் பிரதமர் பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதன் மூலம் ஐ.தே.க. பேரினவாதக் கட்சி என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

**- முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்.**

"உறங்கிக் கிடந்த எதிர்க்கட்சிகளை விழித்தெழச் செய்தது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிதான்.

**- முன்னாள் அமைச்சர் பிரேமச்சந்திரா**

"அரசாங்கம் தனது தவறான நடத்தைகளை மூடிமறைப்பதற்காக சில பொய்களை கூறுகிறது. அதனை நம்பி சிலர் ஏமாந்து விடுகிறார்கள்."

**- சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா**

"ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பதன் உண்மையான அர்த்தம் திசாநாயகா ஐக்கிய தேசிய முன்னணி என்பதாகும். சுதந்திரக் கட்சி போல இதுவும் ஒரு குடும்பக் கட்சிதான். ஜ.ஐ.தே.மு. காமினி, அவரது மனைவி, மைத்துனர் டாக்டர் விக்ரமவீரசூரிய ஆகியோரின் சொத்தாகவே உள்ளது."

**- பிரதமர் ரணில்**

"பௌத்த பிக்குமார் இன்று அரசியல்வாதிகளிடமிருந்து தப்பி வாழ்வது கடினமான ஒரு காரியமாகி விட்டது."

**- கோட்டை ஸ்ரீநாகவிகாரை அதிபதி வண.மாதுளுவாவே சோபித்த தேரோ**

"பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்குதல் வேண்டும். ஆனால் ஆட்சியை மாற்றியமைக்கலாமென்று பத்திரிகைகள் நினைக்கக் கூடாது."

**-ஜனாதிபதி விஜேதுங்கா**

"இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது குறித்தும், பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்துவது குறித்தும் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களைக் கேட்க நான் தயாராக இருக்கிறேன்."

**-ஜனாதிபதி விஜேதுங்கா**

## பிரேமதாசா....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்து விட்டதாக தோன்றுகிறது. விரயங்களுக்கும், களியாட்டங்களுக்கும் இடமில்லை என்பதை செயலில் காட்டத் தலைப்பட்டு விட்டார் புதிய ஜனாதிபதி. அவர் விடுத்த ஆரம்ப அறிவிப்புகளில் சில:-

அரசாங்க ஊழியர்களுக்கு 600 ருபா சம்பள உயர்வு; பென்சனியர்களுக்கு ருபா 260 அதிகரிப்பு; தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம்;மிஹிந்தலையில் நடைபெற விருந்த கம் - உதாவ கொண்டாட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. வீடமைப்புத் திட்டம் இனிமேல் குறைந்த செலவிலேயே மேற்கொள்ளப்படும். அமைச்சு விவகாரங்கள் எதற்கும் இனிமேல் சம்பந்தப்பட்ட அமைச்சரே பொறுப்பானவார். அரசியலமைப்பின் 44 வது பிரிவின் கீழ் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்கள், செயல்பாடுகள், அமைச்சரவையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்கைகள் ஆகியவற்றுக்கும் அமைச்சர்களே பொறுப்பாவர்.

இவை அனைத்துக்கும் மேலாக மாகாண சபைகளின் அதிகாரங்களில் மத்திய அமைச்சர்கள் வீணாகத் தலையிடுதல் கூடாது எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். மாகாணசபை தேர்தல் முடிவுகள் மூலம் அரசாங்கம் பாடம் கற்க வேண்டியுள்ளது என்று கூறியிருக்கிறார் அவர்.

இத்தனை விடயங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களும் இதுநாள் வரை பிரேமதாசாவின் கைகளிலேயே இருந்தன. ஒரு சிறிய தலையீட்டுக்கோ, அபிப்பிராயத்திற்கோ பிரேமதாசா சந்தர்ப்பம் வைத்ததில்லை. கம் - உதாவ, ஜன சக்தி, வீடமைப்பு, மாணவர் மதிய உணவு போன்ற பலவித திட்டங்கள் ஆழமாக ஆய்வு செய்து பார்க்கையில் வறிய மக்களை ஏமாற்றுகின்ற ஒரு வித்தையாகவே தென்பட்டன. இவையெல்லாம் பூரணப்படுத்தப்படாத திட்டங்கள் என்பதே பொதுவான கருத்து. நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி இந்தத் திட்டங்களுக்கு வாரியிறைக்கப்பட்டமை, வீண்விரயமே என்ற கருத்து அரசுக்குள்ளேயும் நிலவுகிறது.

விஜேதுங்க இப்போது குறிப்பிடுகின்ற விரயங்களுள் இவையும் அடங்குகின்றன. இவ்வாறான விரயங்கள் தடுக்கப்படுவது பொருளாதாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துமென கருதப்படுகிறது. பதவி நீடிக்கவேண்டுமென விஜேதுங்கவுக்கு ஆசை இருப்பதாக அவரது செயல்பாடுகள் புலப்படுத்தவில்லை. நல்லதை செய்ய வேண்டுமென்றே அவர் விரும்புகின்றார்.

## ஜெயலலிதாவின் கறுப்புப் பூனைகள் வாபஸ்


தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு இதுவரை பாதுகாப்பு வாங்கி வந்த தேசிய பாதுகாப்பு அணியை (கறுப்புப் பூனைகள்) திருப்பி அனுப்புவதற்கு தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட அதிரடிப்படையைக் கொண்டே ஜெயலலிதாவுக்கு இனிமேல் பாதுகாப்பு வழங்கவும் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

ஜெயலலிதாவுக்கு இதுவரை வழங்கப்பட்ட 'கறுப்புப் பூனைகள்' பாதுகாப்பை வாபஸ் பெற்று விட்டு இந்திய - தீபெத்திய எல்லைக் காவலில் உள்ள அதிரடிப்படைப் பிரிவு ஒன்றை கடமையில் அமர்த்த மத்திய அரசு யோசனை செய்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய - தீபெத்திய எல்லைப் படையினரால் தமிழ்நாட்டில் வேறு ஏதும் பிரச்சினைகள் உருவாகலாம் என்று மாநில அரசு கருதியதையடுத்தே தனது சொந்த அதிரடிப்படையை முதலமைச்சரின் பாதுகாப்புக்கு ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை முதலமைச்சர் ஜெயலலிதாவின் பாதுகாப்பு கருதி மேலதிகமாக ஹெலிகொப்டர் பாதுகாப்பு பிரிவு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும் என தமிழ்நாடு பிரிவு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும் என தமிழ்நாடு அ.தி.மு.க.வினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



மே மாதம் 31ம் திகதி லண்டன் Wooster Park மயூரி மைதானத்தில் நடைபெற்ற Festival of Cricket போட்டியில் தொடர்ந்து நான்காவது தடவையாக வெற்றி பெற்ற யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியை வெற்றிக்கிண்ணங்களுடன் படத்தில் காணலாம்

www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்



# சொற்சதுரங்கம்

## 11

தொகுத்தவர்: ஜனா

ஜூன் 21ம் திகதிக்கு முன் கிடைக்கும் முதலாவது சரியான விடைக்கு பரிசு £50



உங்கள் முகவரி

பெயர்.........................................

முகவரி.........................................

.........................................

.........................................

தொலைபேசி இல:...................

பதில் அனுப்ப வேண்டிய முகவரி

சொற்சதுரங்கம் -11
THAMIZHOSAI
60 PITCAIRN ROAD
MITCHAM
SURREY CR4 3LL

**மேலிருந்து கீழ்:**

1. ஒன்பது கிரகங்களையும் இப்படி அழைப்பர். (7)
2. நான் பன்மையாகிறது இங்கே.(2)
3. கூற்றுவன்.(3)
5. அவர்களது. (தலைகீழ்)(2)
6. தமிழ்நாட்டில் ஓடும் நதி. (தலைகீழ்)(2)
7. பாம்பு.(3)
9. இளையவனை இப்படி அழைப்பார்கள். (தலைகீழ்)(3)
12. நடனமாடுகிறது இந்த மாதம்! (தலைகீழ்)(2)
13. ஆபத்து ஏற்படும்போது இந்தச் சங்கை ஊதுவார்கள். (தலைகீழ்)(3)
14. நம்பிக்கும் நங்கைக்கும் மணநாளில் நடப்பது.(5)
15. "கார்வண்ணக் கூந்தல் தொட்டு தேர் வண்ண மேனிதொட்டு இந்த பாடம் சொல்ல எண்ணம் இல்லையா..." என்பது "பால்வண்ணம் பருவம் ..." என்ற கண்ணதாசன் பாடல்.(படம்:பாசம்) - மலர்கோலம் என்பதற்கு இன்னொரு சொல் அந்தப் பாடலில் உபயோக மாகிறது. (தலைகீழ்)(4)
17. ஒழி அல்லது ஒளி அல்லது இளைப்பு. (தலைகீழ்)(2)
18. ஒன்றைக்குறிக்கும் சொல். ஒரே ஒரு புத்திரன் என்பதற்கு பதில் இந்த புத்திரன் என்று சொல்வார்கள். ஸ்ரீராமன் இந்த பத்தினி விரதன்.(2)
19. ஆறு அல்லது கங்கை.(2)
20. கூடுவது.(தலைகீழ்)(3)
22. தமிழ்முதாட்டிக்கு முப்பைக் கொடுத்தவர்.(5)
23. புரட்சிக் கவியைத் தெரியாதவர் உண்டா? (5)
25. அல்லல் படுவது.(2)
26. சோகத்தை பிரதிபலிக்க உபயோகமாகும் ராகம்.(3)
30. கோசலை, சுமித்திரை, கைகேயியின் நாயகன்.(5)
32. குடைந்து குடைந்து பேசுவது.(4)
34. பள்ளிக்கூடம்.(4)
36. "இந்தக் கண்ணாலே காதல் சங்கதி சொன்னாளே..." என்பது பிரபலமான சந்திரபாபு பாடல். (படம்: மணமகன் தேவை) - சுழலும் ஒன்றை விளக்கும் சொல்.(4)
37. பாவலன்.(2)
39. இது இல்லாமல் தேரை இழுக்க முடியாது.(3)
42. சிறிய தானியம் - இதன் துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார் என்பது குறள்.(2)
43. நாயகனுக்கும் பாத்திரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் சொல்.(2) 46. இந்தப் பொருத்தம் பார்த்து திருமணங்கள் நிச்சயப்படுகின்றன. (தலைகீழ்)(4)

**இடமிருந்து வலம்:**

1. கடவுளிடம் வைத்து - மனிதனிடம் வைக்க முடியாத கை - இந்தக்கை.(5)
2. பிரகலாதன் தன் தாயின் வயிற்றில் கூறத் தொடங்கிய நாமம்.(5)
4. கம்சனைக் கிருஷ்ணன் இது செய்ததாக கூறப்படுகிறது.(3)
6. உலகத்துக்கு இன்னொரு பெயர். இதில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது குறள்.(3)
7. இறுதியில் எல்லாவற்றிற்கும் இந்த முடிவு ஏற்படும் என்பதற்கு இதோடு இது ஆவார் என்பார்கள். "இதற்கு மரம் பாரமா மரத்திற்கு இலை பாரமா..." என்ற பாடல் எம்.எஸ்.ராஜேஸ்வரி பாடி பிரபல்யமான பாடல். (படம்: தை பிறந்தால் வழி பிறக்கும்)(2)
9. வயதானவர்களுக்கு நடந்து செல்ல இதன் உதவி தேவைப்படும் - ஊன்றுகோல்(2)
10. திருடன் - "இவனின் காதலி" என்பது அமரர் கல்கியின் நாவல் - சிவாஜி, பானுமதி நடித்து பிரபல்யமான படமானது.(தலைகீழ்)(4)
11. மரத்தில் தளிர் விட்டு இது வரும். இதில் இலைவரும்.(2)
13. உள்ளே - இதன் அழகு முகத்தில் தெரியும் என்பது தமிழ் முதாட்டியின் வாக்கு.(3)
15. தமிழ் நடசத்திரங்களில் ஒன்று -மகரத்திற்கு அடுத்து.(3)
16. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம் என்பார்கள். விதத்திற்கு இன்னொரு சொல்.(3)
21. பாவனா என்று கேள்வி எழுகிறது. "பாடுவது இவரா இல்லை பாரிவள்ளல் மகனா.."என்பது "பேசுவது கிளியா.. " என்ற கண்ணதாசன் பாடல். (படம்: பணத்தோட்டம்)(3)
23. அரைவாசி - "நீ இது நான் இது கண்ணே..." என்பது பாடல் (படம்: கேளடி கண்மணி)(தலைகீழ்)(2)
24. ஒன்றை யாசிப்பதற்கு ஓரெழுத்து சொல்.(1)
27. தேவர்களும் அரக்கர்களும் இதைத்தேடி பாற்கடலைக் கடைந்தனர்.(தலைகீழ்)(4)
28. பெண்களின் நால்வகைக் குணங்களில் ஒன்று.(3)
29. நால்வகைக் படைகளில் ஒன்று.(2)
31. சந்நியாசம் வாங்கிக் கொள்ள உடுத்திக் கொள்வது.(தலைகீழ்)(2)
32. லாபத்திற்கு இன்னொரு சொல்.(3)
33. தமிழ்ப்படங்களில் கதைகளில் கதாநாயகனுக்கு எதிராக வில்லன் செய்வது.(தலைகீழ்)(2)
35. இசை அரங்கங்களில் இது நடைபெறும். (தலைகீழ்)(4)
36. பண்டிகை நாட்களில் தயாரிக்கப்படும் பதார்த்தம்.(5)
37. ஒன்றைத் தாண்ட உதவும் சொல். (தலைகீழ்)(2)
38. முழுவதும் என்பதற்கு இன்னொரு சொல்.(4)
40. காந்தி இந்த துணியைத்தான் உடுத்திக் கொள்வார் என்று எல்லோருக்கும் தெரியும். (தலைகீழ்)(3)
41. கணவனின் உயிருக்காகப் போராடிய பத்தினி - நடிகையர் திலகம்.(5)
43. வில்லன் அல்லது வில்லி ஆடுவது இந்த நாடகம்.(தலைகீழ்)(3)
44. அதனுடைய.(தலைகீழ்)(4)
45. ஒன்றை நிரூபிக்கத் தேவைப்படுவது. (தலைகீழ்)(4)

## சொற்சதுரங்கம் - 10 விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பா | ர் | த் | தி | ப | ன் | ■ | கௌ | ர | வ | ர் | ■ |
| ச | ■ | ■ | ரை | தி | க | ■ | ளை | ■ | ளை | வ | த |
| ம் | க | மோ | ■ | ■ | ன | ■ | ■ | ந | ய | ன | ம் |
| ■ | ல் | க | ■ | வி | ஜ | யா | ■ | ■ | ல் | வா | ■ |
| ■ | வி | னா | ■ | ர | ■ | ர | ச | ம் | ■ | ■ | ம் |
| பு | ■ | ம் | ய | ல் | க | ங் | மா | ■ | பா | டி | ன |
| ன் | க | பா | ■ | ■ | ■ | தே | தா | ர | ம் | ■ | னி |
| அ | வ | ள் | ■ | வி | பு | ■ | ன | ■ | பு | ர் | மா |
| ■ | லை | ■ | த | த் | து | வ | ம் | ■ | ■ | வ | ■ |
| ஆ | ■ | ர் | ய | து | ■ | ர் | ■ | து | ரோ | ண | ர் |
| ■ | உ | ண | வு | ■ | ம | ண | ம் | ■ | ம் | க | கா |
| நீ | ■ | தி | ■ | அ | ற | ம் | ■ | மா | ■ | ■ | பு |

சரியான விடை அனுப்பி £50 பரிசு பெறும் அதிஷ்டசாலி

**திருமதி கா கதிர்காமநாதன்**
53 Winkley Court
Eastcote Lane
Middlesex HA2 8RT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவா: தேசமநேற



# வேலைக்கு........

(11ம் பக்க தொடர்ச்சி)

மருமகள்தான் வேணும்னு நான் சொல்லியிருப்பேன்."

சாரதாம்மா எழுந்துவிட்டார். சுந்தர் முகத்தில் வியப்பும் கோபமும் இருப்பது எனக்குந் தெரிந்தது. எனக்கு அங்கே நிற்கவே பிடிக்கவில்லை. எழுந்து உள்ளே ஓடிவிட்டேன். 'சே! எவ்வளவு அவமானம்! பெண் பார்க்க வருகிறேன் என்று ஏன் இப்படி தானாக வரவேண்டும்? கனவுகளை வளர்க்க வேண்டும்? அப்புறம் வேலைக்குப் போகிற மருமகள்... வீட்டுக்கு வரப்போகிறவள் கொண்டு வருகிற சம்பாத்தியத்தில் இன்னும் நாலுவடம் சங்கிலி பண்ணிப் போட்டுக் கொள்ளலாம் என்ற நினைப்பா?"

இருட்டில் அழுதுகொட்டிருந்தவள் தலையை அம்மா மெதுவாகத் தடவினாள்.

நான் இன்னும் விக்கி அழுவேன். சுந்தரை மறப்பது அவ்வளவு லேசான காரியமாக இருக்கப்போகிறதா? நிச்சயம் இல்லை.

ஒரு வாரமாகிறது. மனத்திலிருந்து நடந்ததை அகற்றி விட எவ்வளவு முயற்சிக்கிறேன்! கோபம் வருகிறது. துக்கம் வருகிறது. என் மனத்திலிருந்து இடத்தைக் காலி பண்ணு என்று சுந்தரைத் துரத்தப் பார்க்கிறேன் முடியவில்லை.

ஒரு காலை வேளையில் அப்பா ஆபிஸிற்கு போன பிற்பாடு, அம்மா கோயிலுக்குக்க் கிளம்பி விட்டார்.

"நீயும் வரியா மீனாட்சி?" என்றாள் அம்மா. எனக்கு எங்கும் வெளியில் போகப் பிடிக்கவில்லை. மறுத்து விட்டேன்.

வீட்டின் தனிமையில் யோசிக்கவும், அழவும் அவகாசம் இருக்கிறது. அந்த சமயத்தில்தான் கதவு தட்டப்படும் ஓசை வந்தவர் சுந்தரின் அம்மா சாரதா. உள்ளே வரலாமாம்மா? அம்மா இருக்காளா?" -குரலில் எப்போதும்போல் சாந்தம்.

"வாங்கோ! வீட்லே யாரும் இல்லை."

உள்ளே வந்தார். பாயை விரித்தேன். உட்கார்ந்தார். கண்களை மூடிக்கொணடு ஆயாச பெருமூச்சை வெளியிட்டார்.

"வீட்லே யாரும் இல்லாததும் நல்லதுக்குத்தான். நான் உன்கூட மனசவிட்டு சில விஷயங்கள் பேச ணும்.."

"என் கூடவா?..."

"ஆமாம் உன்னை மெனக்கெட்டு வந்து பார்த்துட்டு, அப்புறம் வேணாம்னு சொல்லி அலட்சியப்படுத்தினதா நீ நினைக்கலாம். ஆனா சத்தியமா எனக்கு அந்த எண்ணம் இல்லை. என் பிள்ளை அன்னியிலிருந்து என்கூட மொகம் கொடுத்துப் பேசறதில்லை. நீங்க குழந்தைகள் சந்தோஷமாக இருக்கணும்கிறதுதான் என் எண்ணம்..."

நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சுந்தருக்கும் கோபம் என்பதில் உள்ளுக்குள் மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது.

"வேலைக்குப் போகிற மருமகள் வேணும்னு சொன்னேன்... என்னைப் பேராசை பிடிச்சவள்னுதான் நீ நினைச்சிருப்பே இல்லையா?"

நான் அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தேன்.

"அப்படிதான் தோணும். ஏனா ஏன் அப்படி சொான்னேன்னு உன்கிட்டே சொல்லிடறேன். அப்புறம் நீயா ஜட்ஜ் பண்ணிக்கோ! சுந்தரோட அப்பா செத்து போகச்சே எனக்கு எத்தனை வயசு தெரியுமா? இருபத்தியொண்ணுதான். குழந்தைக்கு ஆறுமாசம், அவன் அப்பாக்கு டைபாய்டு வந்தது. மாமியாரும், மாமனாரும் அவர் செத்தது என் துரதிர்ஷ்டத் தினாலேதான் என்கிற மாதிரி என்னையும் என் பிள்ளையையும் ஒதுக்கினா. எங்கப்பாவும், சித்தியும் கல்யாணம்பண்ணிக் கொடுத்ததோட தங்க கடமை முடிஞ்சதா நினைச்சாச்சு... நான் அவனை வளர்க்க எப்படி கஷ்டப்பட்டேன் தெரியுமா?"

நான் பதில் சொல்ல முயற்சிக்க வில்லை. சாரதாம்மாவும் என் பதிலுக்காகக் கேள்வியைக் கேட்கவில்லை.

"இருபத்தியோரு வயசு பொண்ணு; படிப்பு இல்லாம வேலை செய்ய துப்பு இல்லாம இருந்தா, பத்து பாத்திரம் தேச்சு. சமையல் வேலை செஞ்சுதானே பிழைக்க முடியும்? உன் அப்பா மாதிரிதான் என் அப்பாவும் தனியா எங்கேயும் என்னை எதுக்கு? வீட்டு வேலை தெரிஞ்சா போதுமே'ன்னு முடக்கி போட்ட தாலேதான் சமையல் காரியா வாழ்நாள்ளே பாதி - சுந்தரு தலையெடுக்கிற வரைக்கும் அடுப்படியிலே திண்டாடினேன். நான் அச்சானியமா பேசறேன்னு நினைக்காதே... என் நிலை என் பிள்ளையோட மனைவிக்கும் வரக்கூடாது. ஏன்? எந்த பெண்ணுக்கும் வரக்கூடாது. இந்த நாட்டிலே ஒவ்வொரு பெண்ணும் தன் கால்லேதான் நிங்கறதுக்கான படிப்பும், தகுதியும் பெறணும்...அதைத் தான் ஒவ்வொருத்தியும் லட்சியமா வச்சுக்கணும்."

சாரதம்மாளின் வார்த்தைகளில்தான் எவ்வளவு ஆவேசம்? தான் பட்டகஷ்டம் யாரும் படக்கூடாது என்பதற்காகவா அன்று வேலைக்குப் போகும் பெண் வேண்டும் என்றாள்? நான் அவரது வார்த்தைகளைக் கேட்டு அசந்து போயிருந்தேன்.

சாரதா கையை என் தலையில் லேசாய் ஆசீர்வதிப்பது போல் வைத்தார்.

"நான் ஒண்ணும் பெரிய லட்சியவாதி எல்லாம் இல்லை. வாழ்க்கையிலே ரொம்ப கஷ்டப்பட்டிருக்கேன். நீ என் மருமகளா வா! என் பிள்ளை உன்கிட்டே உசிரையே வச்சிருக்கான். அவன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். உன்னை நல்லா வச்சுப்பான். அப்படி அவனுக்கு ஏதாவது ஆகிவிட்டாலும், நான் இருக்கேன். உன்னைக் காப்பாத்தற தைரியம் எனக்கு இருக்கு.."

நான் முதன்முறையாக வாய் திறந்து பேசினேன்:

"நான் உங்க பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்க கொடுத்து வச்சிருக்கணும். ஆனா அதுக்கு முன்னாடி ஒரு வேண்டுகோள். மூணுவருஷம் எனக்காக அவரைக் காத்திருக்கச் சொல்லுங்கள்!"

"மூணு வருஷமா?"

"ஆமாம். நான் இன்னியிலிருந்து ஷார்ட் ஹேண்ட், டைப் ரைட்டிங் கத்துக்கப்போறேன்... லோவர், ஹையர் ரெண்டும் பாஸ் பண்ணி வேலைக்குப் போற தகுதியை ஏற்படுத்திக்கப் போறேன். அதுக்கப்புறம்தான் கல்யாணம்."

– என் வார்த்தைகள் ஆவேசமாக வெளிவந்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. 'அப்பா - அம்மாவை சம்மதிக்க வைக்க வேண்டும். அதுவரை சுந்தர் காத்திருக்க வேண்டும்! நடக்கும்! நடத்திக் காட்டுவேன்!'

சாரதா என் முகத்தையே பரிவோடு பார்த்தார்.

அப்புறம் இன்னொண்ணு...."

"என்னம்மா...?

நான் எழுந்து தலைப்பை இழுத்து செருகிக் கொண்டு அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தேன்.

"இனி எந்த ஜன்மத்திலும் நீங்கதான் எனக்கு மாமாயாரா வரணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்கோ!' - என்றேன்.

அவர் சிரித்தார்.

"உன் மனசு எனக்கு தெரியாதுன்னு நெனச்சியா? நான் மாமியாரா வரணும்னு ஆசையா? இல்லை, சுந்தரு புருஷனா வரணும்னு ஆசையா?" - என்றபோதுதான் என் மனசு அவருக்குப் புரிந்துவிட்டதில் வெட்கப்பட்டேன்.

கோயிலில் இருந்து திரும்பிய அம்மா வாசற்படியில் நின்று நடப்பது என்ன என்று புரியாமல் விழித்தாள்.

# சொர்க்கம்

(13ம் பக்க தொடர்ச்சி)

சுரீரென்று மனிதன் தன்னை வென்ற மனிதனாவதைப் பற்றி அவர் படித்திருந்த தத்துவங்கள் மனதில் எழுந்தன.

ஓ.... இதுவெல்லாம் ஏசுவுக்கு எதிரான ஒரு நாஸ்திகனின் புலம்பல்கள் அல்லவா?

ஏன்? பாதர் டேவிட் செமினரி (குருமார் பாடசாலை)யில் இவைகளைப் பற்றிச் சொல்லவில்லையா?

பாதர் டேவிட் இலகுவாக எந்த வாதத்தையும் முறியடித்து விடுவார். அவருக்கு உடம்பு முழுவதும் மூளை.

ஞாபகம் வருகிறது.

மனிதன் தன்னைத்தானே மேவுகிற தென்பது மனிதன் தன்னை முதல் வைத்த வாதம். நலிவெல்லாம் உலகத்தை எப்போதும் சூழ்ந்து வருத்த, வாழ்வென்ன என்று சோர்வுறுகிறவேளையில் 'மனித னைவென்ற அதிமனிதனாக மாறு' என்று கட்டளையிட்டுக் கடவுளையும் தூக்கியெறிந்து நலிவும் சோர்வும், பயமும், துன்பமும் நித்தியமாகிப் போன அலுவல்கள் என்று மனிதனுடைய பலவீனத்தைஅதிகரிக்கச் செய்கிற வாதம்.

இது பாதர் டேவிட்டின் வாதம். வாதங்கள், எல்லாவற்றிற்கும் உண்டு. செவுத்தி, எசக்கி ஏன் அந்தச் சாத்தான் கரீம் இவர்கள் தங்களை வெல்வது என்பது எப்போதாவது முடியுமா? திரும்பத்திரும்ப நரகத்தில் உழன்று தங்களை இழப்பவர்கள், இவர்கள்.

பன்றிகள்.

பாதர் மேலும் யோசிக்கத் தொடங்கினார்.

'கர்த்தரே' ஒளி எதுவுமில்லாதமல் இருண்ட வாழ்க்கையை அரவணைத்துக் கொண்டிருக்கிற இவர்கள் சீரான, ஒழுங்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இது சாதாரண மனிதாபிமானம். வேறொன்று மில்லை. இந்த நாற்பது வருஷ திருச்சபைச் சேவையில் நான் கண்டது சிறிய வெற்றிகளே. எல்லாருக்குள்ளும் என்னை நுழைத்துக் கொள்கிற ஆசை இருக்கிறது. இது அகங்காரமோ அல்லது சாதாரண மனிதாபி மானமோ தெரியவில்லை. தெரிந்ததெல்லாம் இந்த ஆசை என்னை வருத்துவதுதான். செவுத்தியும், கரீமும் - ஏன் எசக்கியும் சேர்த்துத்தான் - சேற்றுள் உழல்வதை என்னால் நிறுத்த முடியுமா?

நான் ஒரு சாதாரண மனிதன். அதி மனிதன் அல்ல. இதற்காக வருந்துவேனாயின் கர்த்தரே! இவர்கள் ஒளியைக் காண வேண்டுமென்பதற் காகவே தவிர என்னுடைய அகங்காரம் தோல்வியைத் தழுவுவதனாலல்ல. உம்மிடம் அவர்கள் அடைக்கலம் புக என்னாலானதைச் செய்வதே சரியானது.

செவுத்தியைத் தன்னிடம் வரும்படி எசக்கியிடம் சொல்லி அனுப்பினார். மற்றப் பிரசைகளும் கவனிக்கப்பட வேண்டும். அவருக்கு நிறைய வேலை யிருந்தது.

(தொடரும்)

# ஈழத்தில் உரு........

(19ம் பக்க தொடர்ச்சி)

வேண்டும் என்பதே இப்பழமொழியின் பொருள் என்கிறார் வித்துவான் வேலன்.

## "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க"

திருமணத்தின் போது மணமக்களை வாழ்த்தும் போது பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென்று ஆசி வழங்கு கின்றோம். பதினாறு பிள்ளைகளைப் பெற்று வைபோகமாக வாழ்க என்பதல்ல அதன் பொருள். தமிழில் "ஆஸ்திக் கொரு ஆணும் ஆசைக்கொரு பெண் ணும்" என்றோர் மரபுத் தொடர் இருந்து வருகின்றது. முன்னுக்குப் பின் முரணான இரு மரபுத் தொடர் கருத்து அமையக்கூடுமா? அதுவும் ஒரே சமுக அமைப்பில் இத்தகைய கருத்து வேறுபாடு இருக்க முடியுமா?

"பதினாறும்" என்பதில் உள்ள உண் மைத் தொகையைக் காணுமிடத்து இது பதினாறு பிள்ளைகளைக் குறிக்கவில்லை. ஏதோ பதினாறு வகைகளைக் குறிக் கின்றதென்பது புலனாகும். அந்தப் பதி னாறும் எவை? அவை நற்பேறுகளான பதினாறு பேறுகளைக் குறிக்கின்றன. புகழ், கல்வி, வீரம், வெற்றி, நல்ல மக்கட் பேறு, துணிவு, செல்வம், தானியம், சுகம், போகம், அறிவு, அழகு, பெருமை, நல்ல குடி, உடல் நலம், நீண்ட ஆயுள் என்பனவே அவை. இவை அனைத்தும் ஒருங்கே பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்பதே அதன் நுண்பொருளாகும். இந்தப் பதினாறு வகைச் செல்வங்களுள் ஒன்றுதான் நன் மக்கட் பேறு.

திருவையாற்றுப் புராணத்தில் நந்தி கேசுவரர் இறைவனிடம் இருந்து பதினாறு வரங்களைக் கேட்டுப் பெறுகின்றார். "பதினாறு பேறும் தருவாய்" என்று கேட்கிறார். அதைக் காளமேகப் புலவர் அழகாகப் பாடியும் வைத்துள்ளார்.

"துதி, வாணி, வீரம், விஜயம், சந்தா னம், துணிவு, தனம், அதிதானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு புதிதாம் பெருமை, அறம, குலம், நோயின்மை, பூண்வயதுபதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே."

(தொடரும்)

# மற்றவர் பக்கம்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேடையாக்கங்கள் இன்றைய சூழலில் எதன் குரலில் எவருக்காக பேசுகின்றன என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தக் குழப்பமான நாடகக்குரல் மாக்ஸ்முல்லர் பவன் நாடகங்களில் உறுதிபடுகின்றன. ஆனால் தனிநபர்களாலான குழுக்கள் இதற்கு எதிராக கலாச்சாரத்தின் மாற்றத்தை முன்வைத்து தங்கள் நாடகங்களை நிகழ்த்துகின்றன.இதற்காக பார்வையா ளர்கள் பிரதிபலிப்பும் கூட இந்த இரண்டு வேறுபாட்டின் புள்ளியிலிருந்தே பிறக்கின்றன. நாடகம் என்பது இனியும் ஒரு அரங்கவடிவம் என்ற அளவில் பேசப்படுவது அபத்தமானது. நாடகம் ஒரு விதமான அரசியல் நிகழ்வு. அரசியல் நிகழ்வின் எல்லாக்கூறுகளும் இதற்குள் பொருந்தும். இந்த உயர்தன்மையில அறியப்படும் நிகழ்த்தப்படும் நாடகங்களே "நவீன" என்ற பதத்தின் முந்தைய அர்த்தங்களை உடைத்து புத்துருவாக்கம் தரும். அல்லாதவகையில் எப்போதும் இந்த அதிகார இருநிலைப் போக்கு வேறுவேறு முகத்துடன் தோன்றிக் கொண்டேதான் இருக்கும்.

இந்த செயல்பாட்டை புரிந்து கொண்டோரும், இந்த மொழியின் தீவிரத்தோடு, நாடகமாக்கத்தில் ஈடுபடுவோரும் வெகுசிலரே.புதிய நாடகம் இந்த பரப்பிலிருந்தே தன் நிகழ்த்துதலை நிருபிக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SHANKAR




**தமிழ்த்திரைப்பட AUDIO, CD ஆகியன மொத்த விற்பனை விலையில்**

அத்துடன்

பதனிடப்பட்ட மீன் வகைகள், மரக்கறி வகைகள், அரிசி மா, மிளகாய்த்தூள், சகலவிதமான பலசரக்குப் பொருட்கள் என்பவற்றுக்கு

# லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

**SHANKAR & CO LTD**
231 NORTHOLT ROAD SOUTH HARROW, MIDDLESEX. U.K.
TEL: 081-426-8960 FAX: 081-861 5248

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்